மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சாலையை, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களும், நெடுஞ்சாலைத் துறை அலுவலர் மற்றும் போக்குவரத்துக் கழகத்தினுடைய கோட்ட மேலாளர் ஆகியோரும் கூட்டாகக் கடந்த 25-10-2012 அன்று நேரடியாகச் சென்று, ஆய்வுகளை செய்து அந்தப் பணிகளை மேற்கொண்டிருக்கின்றார்கள். அந்தச் சாலை வழியாக பெரிய பேருந்துகளை இயக்க முடியாத சூழ்நிலை. இருபுறமும் சாலைகள் அரிக்கப்பட்டிருக்கிற சூழ்நிலையால் அந்தப் பேருந்துகளை தற்போது இயக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அந்தப் பகுதியிலே சிறிய பேருந்துகளை இயக்க வேண்டுமென்று கோரியிருக்கிறார். நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று விரைவில் அந்தப் பேருந்துகளை இயக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 27, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.வி. காமராஜ், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

27—

மீன்பிடி துறைமுகம்

***7712—திரு. என்.வி. காமராஜ்:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரண்யம் தொகுதி, தலைஞாயிறு ஒன்றியம், வெள்ளப்பள்ளம் மீனவர் பகுதியில் சிறு மீன்பிடி துறைமுகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) வேதாரண்யம் தொகுதி, தலைஞாயிறு ஒன்றியம், வெள்ளப்பள்ளம் மீனவர் கிராமத்தில் 362 மீனவர்

2012 நவம்பர் 2]

குடும்பங்கள் உள்ளன. வெள்ளப்பள்ளம் மீனவர் கிராமத்தில் வெளிப்பொருத்தும் இயந்திரம் பொருத்திய 220 கண்ணாடி நார் இழைப் படகுகளும் 2 விசைப்படகுகள் மட்டுமே உள்ளன. இவற்றில் கண்ணாடி நார் இழைப் படகுகள் வெள்ளப்பள்ளத்திலிருந்தே மீன்பிடித் தொழில்கள் செய்து வருகின்றன. விசைப்படகுகள் புதுக்கோட்டை மாவட்ட கடற்பகுதியிலிருந்து மீன்பிடிப்பை மேற்கொண்டு வருகின்றன. அங்கு மீனவ மக்கள்தொகை சுமார் 1,500 ஆகும். வெள்ளப்பள்ளம் மீனவர் பகுதியில் மீன்பிடி துறைமுகம் அமைப்பது தொடர்பான சாத்தியக்கூறுகள் குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, அதன்படி திட்ட மதிப்பீடு தயார் செய்து, அரசின் அனுமதியைப் பெற்று, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, பணியைத் துவங்க உடனடியாக நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.வி. காமராஜ் அவர்கள்.

திரு. என்.வி. காமராஜ்: எல்லாத் தரப்பு மக்களுக்கும், அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்து கொடுத்து, எல்லோருடைய இதயங்களிலும் வீற்றிருக்கும் எங்கள் தாயே! இதய தெய்வம், தங்கத் தாரகை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிந்து வணங்கி சமர்ப்பிக்கின்றேன்.

வேதாரண்யம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட வெள்ளப்பள்ளம் ஊராட்சி, வானவன்மாதேவி மீனவர் கிராமம், வெள்ளப்பள்ளம் மீனவர் கிராம கடற்கரைப் பகுதிகளில் ஜூலை மாதம் முதல் நவம்பர் மாதம் வரை சகதியுடன்கூடிய களிமண் கரை ஒதுங்குவதால், மீன்பிடி தொழில் செய்துவரும் மீனவர்களின் fibre படகுகளும், 300-க்கும் மேல் விசைப் படகுகளும் கடலிலிருந்து கரைக்கும், கரையிலிருந்து கடலுக்கும் செல்ல முடியாமல் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு, மீன்பிடித் தொழில் செய்ய முடியாமல் மிகவும் கஷ்டப்படுகின்ற நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். மீனவ மக்களின் வாழ்வில் ஒளியேற்றி, மீனவர்களின் கலங்கரைவிளக்கமாக விளங்குகின்ற இதய தெய்வம்,

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கருணைகூர்ந்து, அருள்கூர்ந்து இப்பகுதி மீனவ மக்களின் வாழ்வில் ஒளி வீசிட, இப்பகுதி கடற்கரையில் சிறு துறைமுகம் ஒன்றை அமைத்திடுமாறு மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்கி சமர்ப்பிக்கின்றேன் தாயே.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜூலை, ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதங்களில், சேறானது வெள்ளப்பள்ளம், விழுந்தமாவடி, வானவன்மாதேவி ஆகிய கிராமங்களில் கரை சேருகிறது. குளிர் காலத்தில் சேறு தானாகவே கரைந்துவிடுகிறது. சேறு எங்கிருந்து இங்கு வந்து கரைசேருகிறது என்பதை நன்கு ஆராய்ந்து, ஆய்வு மேற்கொள்ளப்படும். விழுந்தமாவடி, வானவன்மாதேவி, வெள்ளப்பள்ளம், புஷ்பவனம் ஆகிய கிராமங்களில் அவர்கள் மீன்பிடி தொழில் செய்வதற்கு தகுந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, உடனடியாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 28, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி, மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

28—

உள் விளையாட்டு அரங்கம்

*__5707__—**திரு. சு. ரவி:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—